Reg. No. : ....................................

Name : ..........................................

**FY-412**

**FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2023**

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**(1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்)**

**(8 × 1 = 8 மதிப்பெண்கள்)**

1. அறிவு எனப்படுவது ___________.

(அ) பேதையார் சொல் நோன்றல் (ஆ) உயிர் வெளவர்

(இ) பாடு அறிந்து ஒழுகுதல் (ஈ) கூறியது மறா அமை

2. 'தமிழர் பண்பாடு' என்ற நூலின் ஆசிரியர்.

(அ) தனிநாயக அடிகளார் (ஆ) மு. வரதராசனார்

(இ) எஸ். வையாபுரிப்பிள்ளை (ஈ) எஸ். சுப்பிரமணிய பிள்ளை

3. ஆங்கிலத்தில் 'ஸட்டயர்' என்பதை தொல்காப்பியம் எவ்வாறு குறிப்பிடுகிறது.

(அ) அங்கதம் (ஆ) அவலம்

(இ) சிலேடை (ஈ) அகம்

4. முடிவு பெறாத ஓர் எச்சச் சொல்லின் பின்னால் பெயர் எஞ்சி நின்றால் அதனை _______ என்பர்.

(அ) வினையெச்சம் (ஆ) வினைத்தொகை

(இ) வினையாலணையும் பெயர் (ஈ) பெயரெச்சம்

5. சல்மாவின் ஒரு கவிதைத் தொகுப்பு

(அ) எட்டாவது பிறவி (ஆ) நீரில் அலையும் முகம்

(இ) பச்சை தேவதை (ஈ) வனப்பேச்சி

6. 'Femina' என்ற சொல் எம்மொழிச் சொல்

(அ) இலத்தீன் (ஆ) ஆங்கிலம்

(இ) தமிழ் (ஈ) கிரேக்கம்

7. "மனிதனோ அவன் படைப்போ அல்ல இயற்கை" – யார் கூற்று ?

(அ) கெதே (ஆ) பிளேட்டோ

(இ) பாரதிதாசன் (ஈ) தனிநாயக அடிகளார்

8. "ஓர் அழுக்கு மேகத்தை இழுத்து முகம் பொத்திக் கொண்டது" – என்று வைரமுத்து எதைக் குறிப்பிடுகிறார்.

(அ) சூரியன் (ஆ) மலை

(இ) சந்திரன் (ஈ) கடல்

9. அசோக மித்திரன் ஆசிரியராகப் பணியாற்றிய மாத இதழ்.

(அ) எழுத்து (ஆ) மங்கையர் மலர்

(இ) கணையாழி (ஈ) கலைமகள்

10. கல்காவிலிருந்து சிம்லா செல்லும் மலை ரயில் அறுபது மைல் செல்ல எத்தனை மணிநேரம் ஆகும்.

(அ) 5 மணிரேநம் (ஆ) 6 மணிநேரம்

(இ) 8 மணிநேரம் (ஈ) 7 மணிநேரம்

**(11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்.)** **(6 × 2 = 12 மதிப்பெண்கள்)**

11. “யாதும் ஊரே; யாவரும் கேளிர்;

தீதும் நன்றும் பிறர்தர வாரா;”

– இப்பாடலடிகள் தரும் கருத்தை எழுதுங்கள்

12. ‘கவின் கலைகள்’ – சிறு குறிப்பு எழுதுங்கள்

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களுள் வினையெச்சச் சொற்கள் இரண்டினை எடுத்தெழுதுங்கள்

(நேற்று வந்த நல்லவர், தம்பி தூங்கி எழுந்தான், பாடிய பெண் நேற்று வந்தாள், கமலா எழுந்து நின்றாள்)

14. “பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூ சூடிடம்மா

என்னும் மொழிகள் இனி எக்காலம் கேட்பன் ஐயா”

“தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா உன்னைத்

தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா”

இரு பாடலடிகளும் எந்தச் சுவைகளை உணர்த்துகின்றன.

15. ‘மண் மொழி’ கதையில் வரும் இரு பாத்திரங்களின் பெயர்களை எழுதுங்கள்.

16. “மோட்டாரில் பிரயாணம் செய்தால் மூன்று மணி நேரத்தில் சிம்லாவை அடையலாம். ரெயில் பிரயாணத்தை விட மோட்டார் பிரயாணம் தான் மிகவும் சௌகரியமானது.”

இந்தப் பகுதியில் இடம் பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களை எழுதுங்கள்

17. கீழ் வருவனவற்றுள் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களுடன் தொடர்புடையவற்றை எடுத்தெழுதுக.

*(யாழ்ப்பாணம், தடகளம், வாணிபம், தின வர்த்தமானி)*

18. பயண நூற்களின் இரண்டு பயன்களை எழுதுங்கள்.

**(19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்.**

**(5 × 4 = 20 மதிப்பெண்கள்)**

19. கூத்தில் பயன்படுத்தப்படும் ஆடை ஆபரணங்கள் பற்றி எழுதுங்கள்.

20. "சுரிகுழல் அசைவுற அசைவுறத்
துயிலெழு மயிலென மயிலெனப்
பரிபுரம் ஒலியெழ ஒலியெழப்
பனிமொழி யவர்கடை திறமினோ
– ஜெயங்கொண்டார்

"பின்னிக் கிடக்கும் முல்லைக் கொடியைப்
பிரிக்க முடியுமா-அன்பைப்
பிரிக்க முடியுமா?
கண்ணும் கண்ணும் கட்டின கூட்டைக்
கலைக்க முடியுமா?"
– பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம்

இவ்விரு பாடல்களையும் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.

21. தமிழ்க் கவிஞர்கள் இயற்கையைத் தம் படைப்புகளில் எவ்வகைகளில் பயன்படுத்தியுள்ளனர்?

22. "நீலகிரி மாவட்டத்தில் சட்டத்திற்குப் புறம்பாக மரங்களை வெட்டவோ, மணல் மற்றும் கல்குவாரி தோண்டலோ கூடாது"
என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது"

இத்தகைய ஒரு உத்தரவிற்குக் காரணம் என்ன என்பதை உங்கள் பாடப்பகுதியின் துணை கொண்டு விமர்சித்துக் குறிப்பு தயாரியுங்கள்.

23. வலையொளி (யூடியூப்)க்கு பதிவிடுவதற்காக அயோவா சி.டி குறித்து வருணனைக் குறிப்பு தயாரியுங்கள்.

24. கீழே தரப்பட்டுள்ள பகுதியைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

"சி.வை. தாவின் தந்தை தமிழ்ப் புலமை மிக்கவர், ஆசிரியராக விளங்கியவர். தொடக்கக் கல்வியைத் தம் தந்தையாரிடமே சி.வை.தா. கற்றார். அக்கால வழக்கப்படி அறநூல்கள், சொற் பொருள் கூறும் நிகண்டு நூல்கள் ஆகியவற்றைக் கற்ற பின்னர், மேலும் சில தமிழ் நூல்களை சி.வை.தா. கற்க விரும்பினார். சிறுப்பிட்டிக்கு அருகிலமைந்த கன்னாகம் என்னும் ஊரிலுள்ள முத்துக் குமாரக் கவிராயரிடம் இலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்றார். ஆங்கிலமும் கற்கும் ஆர்வமுடையவராய்த் தெல்லியம்பதி அமெரிக்க மிசன் கலாசாலையில் ஆங்கிலம் கற்றார்.

(அ) சி.வை.தா. தொடக்கக் கல்வியை யாரிடம் கற்றார்?

(ஆ) அவர் முதலில் கற்ற நூற்கள் எவையெல்லாம்?

(இ) இலக்கிய இலக்கணங்களை யாரிடம் பயின்றார்?

(ஈ) அவர் ஆங்கிலம் எங்கு கற்றார்?

**(25 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம்.**

**(4 × 6 = 24 மதிப்பெண்கள்)**

25. தமிழ்ச் சங்கம் நடத்தும் பொங்கல் விழாவில் "தமிழ் இலக்கியங்களில் வீரம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்ற உரைக் குறிப்பு தயாரியுங்கள்.

குறிப்புகள்:

- ★ புறநானூறு
- ★ கலிங்கத்து பரணி
- ★ மனோன்மணீயம்

26. பள்ளிக் கலைவிழா துவக்க விழாவிற்கு வருகை தரவுள்ள தமிழ் திரைப்பட/நாடக நடிகருமான திரு. நாசர் அவர்களிடம் வினவுவதற்கான நாடகம் தொடர்பான ஐந்து வினாக்கள் அடங்கிய வினா நிரல் தயார் செய்யுங்கள்.

DITTO WS

27. இன்று பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாகிறார்கள். பெண்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு 'சமூகத்தில் பெண்களின் இன்றைய நிலை' என்னும் தலைப்பில் தலையங்கம் தயார் செய்க.

28. 'இயற்கைப் பேரிடரின் பாதிப்புகள்' என்னும் தலைப்பில் தொலைக்காட்சி உரை தயாரியுங்கள்.

29. 'ஒரு கிராமத்து நதி' பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு நதியின் அழகை வருணித்து வருணனைக் கட்டுரை எழுதுங்கள்.

**(30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு இரண்டுப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்)**

**($2 \times 8 = 16$ மதிப்பெண்கள்)**

30. தமிழர்களின் பண்பாட்டின் அடையாளமாக கிராமியக் கலைகள் விளங்குகின்றன என்பதை வலியுறுத்தி 'பண்பாடும் கலைகளும்' என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்:

★ தெருக்கூத்து

★ ஒயிலாட்டம்

★ வில்லுப்பாட்டு

31. "நவீன இலக்கியங்களான கவிதை, கதை போன்ற இலக்கியங்கள் சமகால பிரச்சினைகளைப் பதிவு செய்துள்ளன" என்ற கூற்றை உங்கள் பாடப்பகுதியின் அடிப்படையில் திறனாய்வு செய்து கட்டுரை எழுதுங்கள்

குறிப்புகள் :

கவிதைகள் – 'எதிர்ப்பின் வடிவம்'

'ஆதியில் சொற்கள் இருந்தன'

கதை – 'மண் மொழி'

32. தமிழ் இலக்கியங்கள் அன்றும் இன்றும் இயற்கையைப் போற்றியுள்ளன என்ற கருத்தை வலியுறுத்தி 'தமிழ் இலக்கியங்களில் இயற்கை' என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்:

தேவாரத் திருப்பாக்கள்

திருமுருகாற்றுப்படை

சீவக சிந்தாமணி

---